Registered as a News paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் ( 22 - 04 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 63

## பரந்தன் தொழிற்சாலை மூடப்பட மாட்டாது

(கொழும்பு) - செல்லச்சாமி

பரந்தன் இரசாயன தொழிற்சாலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மூடப்படமாட்டாதென கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம் எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய இவர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மூடுவதற்கான எந்த ஒரு திட்டமும் தம்மிடமில்லை (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### 'காந்தன்' 'யூசி'

(யாழ்ப்பாணம்)

மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்தமாதம இருபத்தோராம் திகதி ஏற்பட்ட மோதலின் காரணமாக வீரவேங்கை காந்தன் (அருள்மொழி சதீஸ்குமார், செபஸ்ரியன் வீதி, பாஷையூர்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் சம்பவமொன்றில் வீரவேங்கை யூசி (பேசாலை, மன்னார்) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### ராஜீவ் அமேதியில்

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதம மந்திரியுமான திரு. ராஜீவ் காந்தி மீண்டும் உத்தரப்பிரதேச மநிலத்தில் உள்ள அமேதி தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளார்.

### கொழும்பில் சார்க் மகாநாடு

(கொழும்பு)

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கமான (சார்க்) அமைப்பின் மாநாடு இவ் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. எனினும் இம் மாநாட்டிற்கான திகதிகள் இந் (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுவாஸ்கோ அமெரிக்கா திரும்பினார்

(றியாட்)

வளைகுடாவில் தனது கடமையை முடித்துக்கொண்ட நேசப்படைத் தளபதியாகக் கடமையாற்றிய ஜெனரல் நோர்மன் சுவாஸ்கோ அமெரிக்கா திரும்பியுள்ளார்.

ஐ. நா. சபையின் தீர்மானத்தினை அமுல்படுத்த வளைகுடாசென்றதான் கடமையை முடித்துவிட்டுத் தாயகம் திரும்புவதாக அவர் தெரிவித்தார்.

### நாதஸ்வரமும் சிவப்பு றோஜாவும்

(கொழும்பு)

இரண்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆரம்பிப்பதற்கு முதல் பாராளுமன்றத்தில் நாதஸ்வரத்தின் இசையுடன் மேளவாத்திய இசையும் மெல்லிய ஒலியில் ஒலிபரப்பப்பட்டது இதேவேளை ஜனாதிபதி உரையாற்றிய ஒலிவாங்கிக்கு அருகில் சிவப்பு ரோஜாப்பூச் செண்டு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

## 117 இராணுவ முகாம்களுக்கு மத்தியில்

# நாம் கிழக்கிலும் பலமாகவுள்ளோம்

## மட்டு.அம்பாறை பிராந்திய தளபதி கருணா

(நமது நிருபர்)

கிழக்கில் நாம் பலமாக உள்ளோம். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நூற்றிப் பதினேழு இராணுவ முகாம்களைச் சிறிலங்கா இராணுவம் அமைத்துள்ளது. ஆனால் பலமான தாக்குதல்கள் பலவற்றை நாங்கள் நடத்தி வருகிறோம். பொதுமக்களும் பல நெருக்குவாரங்கள் மத்தியிலும் எமக்கு உதவுகிறார்கள். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலும் தென்தமிழீழ மக்களின் மன உறுதி எமக்கு உத்வேகத்தைத் தருகிறது என்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் தமிழீழ விடுதலைப் புலிகள் பிராந்தியப் பொறுப்பாளர் கருணா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

சிங்கள இராணுவம், புலம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழும் தமிழ் மக்களை, அவர்களது சொந்தக் குடியிருப்புகளில் பலவந்தமாகக் குடியேற்றுகிறது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் வழமைக்குத் திரும்பி, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக கடல் கடந்த மனித நேய ஸ்தாபனங்களுக்கும், மற்றவர்களுக்கும் காட்டுவது தான் இதன் நோக்கமாகும். கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சிறிலங்கா இராணுவம், முஸ்லிம் ஊர்காவற்படை ஆகியவற்றின் கெடுபிடிகள் காரணமாக அரசாங்க ஊழியர்கள் கடமைக்குச் சமுகம் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்கள் என்றார் அவர்.

(3ஆம் பக்கம் பார்க்க)



### மொனறாகல மாவட்டத்தில் 21 சிங்களவர் கொலை

(கொழும்பு)

மொனறாகல மாவட்டத்திலுள்ள உக்கம்பிட்டிய கிராமத்தினுள் புகுந்த சிலர் இருபத்தொரு சிங்களக் குடியேற்றவாசிகளைச் சுட்டுக்கொன்றிருப்பதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

இச்சம்பவத்தில் சில வாகனங்களுக்கும், வீடுகளுக்கும் தீயிடப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

### ஆசிரியையும், தாயும் இராணுவத்தால் கொலை

(திருமலை)

திருக்கோணமலை தம்பலகாமப் பகுதியில் ஒரே குடும்பத்தில் இருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

கடந்த 13ஆம் திகதி இப்பகுதிக்கு வந்த படையினர் தியாகராசா மகேஸ்வரி என்ற இளம் ஆசிரியையை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய பின்னர் கொலைசெய்ததோடு அவரது தாயான தியாகராசா செல்லநாச்சியார் என்பவரையும் கத்தியினால் வெட்டி (4ஆம் பக்கம் பார்க்க)

### மாவிலங்கேணி இராணுவத்துடன் மோதல்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவிலங்கேணியில் இருந்துசெம்மண்தீவைநோக்கி முன்னேறமுயன்றபோது விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

### லொறி மோதி வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிச் சந்தியில்நேற்று அதிகாலை ஐந்துமுப்பது மணியளவில் லொறிஒன்று மோதியதில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மா. வைத்திலிங்கம் என்ற வயோதிபர் வீதியோரத்தில் நின்றசமயம் லொறி ஒன்று மோதியதுடன் நிறுத்தாது சென்றுவிட்டதாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் கூறினார். (லோ)

### குவைத்தில் புதிய அரசாங்கம்

(குவைத்)

குவைத்தில் பிரதமர் ஷேக்-கான் அல் அப்துல் அல் சபா தலைமையிலான புதிய அரசாங்கம் நேற்று முன்தினம் பொறுப்பேற்றது

குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் பல அத்தியாவசிய தேவைகளை மீண்டும் செயல்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டில் இதே ஷேக்கானின் தலைமையிலான அரசாங்கம் பதவி விலகிய ஒரு மாதத்திற்குப் பின்னர் புதிய அரசாங்கம் நேற்று முன்தினம் பொறுப்பேற்றது.

### அதிபர்களைவிட சம்பளம் ஆசிரியர்களுக்கு அதிகம்

(கொழும்பு)

புதிதாக நியமனம் பெறும் மூன்றாம் தர அதிபர் ஒருவரைவிட புதிதாகப் பயிற்சிபெற்று வெளியேறும் பயிற்றப்பட்ட ஆசிரியர் அதிகமான சம்பளத்தைப் பெறுகின்றார். 1990, (4ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் பொலிஸாரால் இந்தியத் தூதரக ஊழியர் கடுமையாகத் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பில் இந்தியத் தூதரக ஊழியர் ஒருவர் இலங்கைப் பொலிஸால் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் பற்றி மேலும்தெரிய வருவதாவது: இந்தியத் தூதரக ஊழியரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான டி. ராஜேந்திரன் கொழும்பில் (4ஆம் பக்கம் பார்க்க)

### பரப்புக்கடந்தானில் இருந்து இராணுவம் வெளியேறியது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பரப்புக்கடந்தான், ஆட்காட்டிவெளி ஆகிய இடங்களில் தரித்து நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றக்காலை எட்டு மணியளவில் மாந்தைக்குத் திரும்பிவிட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆட்காட்டிவெளி, பரப்புக்கடந்தான் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினமும், அதற்கு முதல் நாளும் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் பதி (4-ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் மீது புளொட் சூடு மூவர் பலி; 11 பேர் காயம்

வவுனியா - யாழ் வீதியில் தாண்டிக்குளத்திற்கும் காமினி மகா வித்தியாலயத்திற்கும் இடையில் நகரப்பகுதியை நோக்கிச் செல்வதற்காக நின்றிருந்த பொது மக்களை நோக்கி புளொட் குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பதினொரு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 10.45 மணியளவில் இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவத்தில் நுகேகொட திறந்த பல்கலைக்கழக உதவிவிரிவுரையாளர் நடராசா மதிதரன் (வயது 28 கொக்குவில்), சுந்தரலிங்கம் கனகேந்தினி (வயது 18 கோதண்டர் நொச்சி குளம் வவுனியா), சுப்பையா அமராவதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரச்சினை பற்றி குறிப்பிடவேண்டும்

**• தோமஸ் ஆபிரகாம்**

(சென்னை)

இந்தியாவில் சகல அரசியல் கட்சிகளும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வின் ஐக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிடவேண்டும் என இலங்கையின் முன்னாள் இந்தியத் தூதுவரான தோமஸ் ஆபிரகாம் கூறியுள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''தெற்காசிய, தென்கிழக்காசிய கல்விப் பிரிவு'' ஏற்பாடுசெய்திருந்தகருத்தரங்கில் பேசிய தோமஸ் ஆபிரகாம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் கருத்தரங்கில் இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா மீளாய்வு செய்ய வேண்டும் என்றும், இலங்கை விவகாரத்தில் தலையிடாதிருக்கும் கொள்கையைக் கைவிட்டு மீளாய்வு செய்ய வேண்டும் என்றும், முன்னாள் இராஜதந்திரிகள்' கல்விமான்கள், பத்திரிகையாளர்களைக் கொண்ட குழுவொன்றுகேட்டுக்கொண்டது.

இந்தக் கருத்தரங்கில் பத்திரிகையாளர்களான என். ராம், எஸ். சிவநாயகம், தோமஸ் ஆபிரகாம், முன்னாள் கூட்டணி எம்.பி. இரா. சம்பந்தன், கலாநிதி வி சூரிய நாராயணன், சரித்திரவியலாளர் எஸ் முத்தையா ஆகியோரும் பேசினர்

## தாதிகள் பயிற்சிக்கு ஆண்கள் 5வீதம் மட்டும்

(கொழும்பு)

இவ்வருடம் ஆண்தாதிகள் ஐந்து சதவீதம் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர். தாதிகள் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர்களில் ஏனையோர் பெண்களாயிருப்பர். தாதிகள் பயிற்சிநெறி தமிழ் மொழியிலும் நடத்தப்படும். சுகாதார திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களுக்கு மாத்திரமே ஐந்து சதவீத ஆண்தாதிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

தற்சமயம் தாதிகள் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் தாதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## 2ஆம்ஆண்டு வீர அஞ்சலி



### மேஜர் சுபாஸ்
### (பு. உதயகுமார்)

வீர உதயம்: 03-03-1965 வீரமரணம்: 14-04-1989
திதி: 22-04-1991

இந்நாளில் உனை நாம் பிரிந்தோம்
எந்நாளும் மறவோம் உன் நினைவை
ஆலடிச் சந்தியிலே அழகான நினைவாலயம்
ஆயிரம் உன் கதைகள் சொல்லும்!
அந்நியனின் முகாமழிக்க நீ சென்ற வேளை
சிந்த வைத்தே கண்ணீர் எமையெலாம்
மண்ணுக்கு உரமாகி மாவீரனானாய்!
எண்ணும் பொழுதிலே இதயம் கனக்கிறது
நீங்காமல் நெஞ்சிலே நிறைந்தாய்!
பிஞ்சிலே எமையெலாம் பிரிந்தாய்
நீ தவழ்ந்து விளையாடிய மண் நவாலி
ஆனால் மாவீரனாக ஆடி வீழ்ந்த மண்ணோ ஆலடி
ஈழப் போராட்டம் தடம் புரளவில்லை
போராட்டப் பாதையில் நீ பதித்த சுவடுகள்!
காலத்தால் அழியாத காவியங்கள்!
வீரத்தின் விளைநிலமே! உந்தன்
பாதச் சுவடுகளில் வீறுநடையிட்டு
வென்றெடுப்போம் விரைவில் தமிழீழம்!

14-04-1989 நவமித் திதியில் வீரமரணமடைந்த எமது புத்திரன் உதயகுமாரின் (மேஜர் சுபாஸ்) இரண்டாவது ஆண்டு நினைவுத்திதியான (22-04-1991) இன்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை நவாலி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வடக்கு.
22. 04. 1991.

பெற்றோர், சகோதரர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(ட. 2387)

## ஹெனாயில் அமெரிக்க அலுவலகம்

வியட்நாம் போரின்போது காணாமற் போனவர்கள் அல்லது கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட அமெரிக்கப் படை வீரர்கள் தொடர்பான பிரச்சினையைச் சமாளிக்க அமெரிக்கா ஹெனாயில் அலுவலகம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்திருக்கிறது.

இதற்கானஒப்பந்தம் நேற்று ஹெனாயில் கைச்சாத்தாகியது.

## இந்தியாவின் சனத்தொகை 84 கோடி

இந்தியாவின் சனத்தொகை கடந்த மார்ச் மாத கணக்கீட்டின் படி 84 கோடியே 39 லட்சத்து 30 ஆயிரத்து 861 பேர் ஆகும் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கீட்டினை விட இது 16 கோடியே ஆறு லட்சத்து 1764 அதிகமாகும் எனவும் கூறப்பட்டுள்ளது.

உலக சனத்தொகையில் இரண்டாவது இடம் வகிக்கும் இந்தியா உலகமக்கள் தொகையில்16 சத விகிதம் வகிக்கின்றது.

## மகஜர் கையளிப்பு

கோப்பாய் 15ஆம் வட்டாரப்பகுதியை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கக் கோரும் மகஜர் ஒன்றினை நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையம் கையளித்துள்ளது. யாழ். அரசாங்க அதிபர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர், கோப்பாய் அரசாங்க அதிபர் ஆகியோரிடம் இம் மகஜர் கையளிக்கப்பட்டது.

## அதிபர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மருதனாமடக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களும் இன்று திங்கட்கிழமை பி ப. 2.30 மணிக்கு இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள கல்வி சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மருதனாமடக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

பூநகரி ஆலடிக்கும், சங்குப்பிட்டித் துறைக்கும் இடையல் (19 4.91) வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் பெண் ஒருவரின் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தகுந்த ஆதாரத்தைக் காட்டி இதனைப்பெற்றுக்கொள்ளலாம்.

## அ. இ. முஸ்லிம் லீக் கூட்டிலிருந்து விலகியது

(சென்னை)

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் (அப்துல் சமது பிரிவு) இந்திரா காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க.கூட்டணியிலிருந்துவிலகி உள்ளது. இது 44 சட்ட மன்றத் தொகுதிகளிலும் 8 மக்களவைத் தொகுதியிலும்போட்டியிடுவதற்காக பாட்டாளிமக்கள் கட்சிக் கூட்டணியுடனும், தி மு.க கூட்டணியுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

அ.இ.அ.தி.மு.க.வின்மூத்த துணைப் பொதுச் செயலாளர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் தஞ்சாவூர் சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து போட்டியிடுவாரென செல்வி ஜெயலலிதா அறிவித்தார். இந்தத் தொகுதிக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட துரை திருஞானம் பெயர் அ.இ.அ.தி.மு.க.வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். செல்வி ஜெயலலிதா போட்டியிடும் காங்கேயம் மற்றும் பரகூர் தொகுதிகளில் அவரைஎதிர்த்துப் போட்டியிடப் போவதாக தாயக முன்னேற்றக் கழகத் தலைவரும், திரையுலகப் பிரமுகருமான டி. ராஜேந்தர் அறிவித்துள்ளார்.


**S. L. P. S.**

**இலங்கை அதிபர்கள் சேவை**

தரம் 1, 2, 3, போட்டிப் பரீட்சைக்கான

**துரித பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம் 27 - 04 - 1991 காலை 8 - 30 மணி

பாடங்கள்: கல்விக் கொள்கையும், நிர்வாகமும், பொது அறிவு, கிரகித்தல்.

முழுக்கட்டணம்: 250/-

★ கல்விச் சேவை விரிவுரையாளர்கள்.
★ பாடக் குறிப்புகளும் மாதிரி வினா - விடைகளும் இலவசம்
★ Limited Number in Each Class

**வணிக முகாமைத்துவக் கல்லூரி**
**(School of Business Administration)**
16, 3ஆம்குறுக்குவீதி, யாழ்ப்பாணம்.

(ட-2400)


## நினைவு கூருகின்றோம்...

**1991-04-22**



லெப்.
**கிர்மானி**
(சிலுவைராசா ஜோண்சன் பேட்டன்-குருநகர்)

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் காங்கேசன்துறை ஹாபர்வியூ மினிமுகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

**கப்டன் பவான்/ஜயா** (பொன்னம்பலம் ஜெயபவான்-சுதுமலை)
**லெப்.கிர்மானி** (சிலுவைராசா ஜோண்சன் பேட்டன் - குருநகர்)
**ஸ்வர்ணன்** (பொன்னையா சிறீபோஸ் - சிறுவிளான்)
**தாஸ்** (கஸ்பார் சூசைதாசன் - மன்னார்)

1989ஆம் ஆண்டு இந்தியப்படை மற்றும் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.கிருஷ்ணன்**
(ஆனந்தராசா சிவராசா - திருமலை)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B' 2344)

### ❋ சிந்தனைக்கு ❋

இன்றியமையாத தேவையின் வலிமையை எதிர்த்து நிற்க எவராலும் முடியாது.

— ஈஸ்கிலஸ்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 22-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 023-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05


## பலப் பரீட்சைக் களத்தில் இந்திய அரச இயந்திரம்

இந்தியாவில் விடுதலை கோரிப் போராடும் மாநிலங்களான பஞ்சாப், அஸாம் மாநிலங்களின் தேர்தல்கள் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளன. வன்முறைக் களங்களாக விளங்கும் இம்மாநிலங்களில் அமைச்சரவையின் சிபார்சின் பேரில் பொதுத் தேர்தலுடன் இங்கும் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அறிவித்தார். ஆனால் தற்பொழுது அம்மாநிலங்களின் ஆளுநர்களின் சிபார்சின் பேரில் தேர்தல்கள் பிற்போடப் பட்டுள்ளன.

பஞ்சாப்பிலும், அஸாமிலும் தேர்தல் நடத்துவதற்கு பெருமளவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் தேவை எனவும், ஏனைய இடங்கள் யாவற்றிலும் தேர்தல் நடைபெறுவதனால் பெருமளவு உத்தியோகஸ்தர்களை அம்மாநிலங்களுக்கு அனுப்பி வைக்க முடியாது எனவும் தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் அறிவித்துள்ளதோடு தேர்தலையும் ஒத்திவைத்திருப்பதாகவும் அறிவித்துள்ளார். ஆனால் மிக விரைவில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் தேர்தலை நடத்துமாறுசந்திரசேகர் அமைச்சரவை ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்தபோது ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் இம்முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டார். ஆனால் அமைச்சரவை இம்முடிவை மாற்றிக் கொள்ளவில்லை இதன்காரணமாக வேறு வழியின்றி ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கவேண்டிய நிலைபரம் ஏற்பட்டது.

ஆனால், தேர்தல் நடப்பதை ஜனாதிபதியோ பெரும்பாலான அரசியற் கட்சிகளோ விரும்பவில்லை. குறிப்பாக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி விரும்பவில்லை. இதன் காரணமாக தேர்தலை எவ்வாறாயினும் பிற்போட்டு விடுவது தவிர்க்க முடியாதது என்ற இந்திய ஜனாதிபதியின் எண்ணத்தின் பிரகாரம் ஆளுநர்களின் சிபார்சுகளின்படி தற்பொழுதுவாக்குப்பதிவு பிற்போடப்பட்டுள்ளது. அதாவது ஜனாதிபதி சட்ட பூர்வமாக தனது கடமையைச் செய்வதாகக் காட்டிக் கொண்டுள்ள அதேவேளை மாற்றுவழியூடாக இந்திரா காங்கிரசின் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளார் என்றே சொல்லுதல் வேண்டும்.

பஞ்சாப், அஸாம் தேர்தல் விவகாரம் இம் மாநிலங்களின் அரசியற்சூழல் என்பதைவிட சந்திரசேகரினதும் ராஜீவ் காந்தியினதும் போட்டியின் வெளிப்பாடேயாகும். சந்திரசேகர் பஞ்சாப், அஸாம் தேர்தலை நடத்துவதன் மூலம் இந்தியாவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் தான பேணிப்பாதுகாத்ததாகக் காட்ட முற்படுவதோடு பஞ்சாப், அஸாம் பகுதியில்தான் அமைதியை நிலைநாட்டியுள்ளதாகவும் வெளியுலகிற்குக் காட்ட முற்பட்டுள்ளார். அவரின் இந்நடவடிக்கைக்கு அஸாமிலுள்ள உல்பா தீவிரவாதிகளின் ஆதரவும் பஞ்சாப்பில் சில தீவிரவாதக் குழுக்களினதும் அகாலிதள் மான் பிரிவின் ஆதரவும் கிடைத்துள்ளது.

ஆனால், இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி இதனை வன்மையாக எதிர்ப்பதோடு பஞ்சாப், அஸாம் பிரச்சினையில் சந்திரசேகர் காலத்தில் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகக்கருதும் ஒரு நிலை வெளியில் உருவாவதையும் விரும்பவில்லை. அத்தோடு தமது செல்வாக்குக் குறைந்த அஸாமிலும், பஞ்சாப்பிலுமுள்ள 27 லோக்சபாத் தொகுதிகளிலும் இருந்து எதிர்க்கட்சியினர் தெரிவுசெய்யப்படும்பட்சத்தில் ஆட்சி அமைப்பதிலும் இந்திரா காங்கிரசிற்கு இடைஞ்சல் ஏற்படுமெனவும் கருதுகின்றார். இதன காரணமாக தற்போதையதேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் கட்சியே பஞ்சாப் அஸாம் தேர்தல்களை பற்றித் தீர்மானிக்கவேண்டும் என இந்திரா காங்கிரஸ் அறிவித்துள்ள அதேவேளை தேர்தல் நடைபெறுமானால் அதனை இந்திரா காங்கிரஸ் பகிஷ்கரிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான இந்திரா காங்கிரசின் அழுத்தம் இந்திய ஜனாதிபதியையும், தேர்தல் கமிசனையும் பணிய வைத்துள்ளதாயினும், சந்திரசேகரும் தனது முயற்சியைக் கைவிட்டதாக இல்லை. பொதுத்தேர்தலுடன் தேர்தல் நடைபெறாவிட்டாலும், தனது ஆட்சிக் காலத்தின் போதாவது தேர்தல் அறிவிக்கப்படல் வேண்டும் எனத் தீவிரமாகவுள்ளார். ஆனால் சந்திரசேகரினதும், ராஜீவ் காந்தியினதும் பலப் பரீட்சையில் இந்திய அரசு எப்பொழுதும் ராஜீவ் காந்தியின் பக்கம்தான் என்பதில் எவருக்கும் சந்தேகம் ஏற்படத் தேவையில்லை. ஏனெனில் இந்திய அரச இயந்திரம் எப்பொழுதும் இந்தியாவைவிட இந்திரா காங்கிரசிற்காகவே இயங்கி வந்துள்ளது/வருகின்றது.

# கொர்பசேவிற்கு எதிராக இராணுவம் செயற்படாது

### • மார்ஷல் சேர்ஜி அக்ரோமெயெவ்

(பரிஸ்)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவை தூக்கியெறிவது குறித்து சோவியத் ராணுவம் பரிசீலிக்காது என சோவியத் யூனியனின் முன்னணி இராணுவத் தலைவர்களில் ஒருவரான மார்ஷல் சேர்ஜி அக்ரோமெயெவ் உறுதியளித்தார்.

கடந்த வாரம் பிரான்சின் தலை நகரம் பரிஸில் நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கொன்றில் மொஸ்கோவில் இருந்து வீடியோ தொடர்பு மூலம் உரையாற்றிய அக்ரோமெயெவ் ஜனாதிபதி கொர்பச்சேவை சோவியத் ராணுவத்தின் மார்ஷல்கள் தூக்கியெறிவர் என்று கவலைப்பட வேண்டாம் எனவும், அத்தகைய எந்த வகையான அபாயத்தையும் சோவியத் ராணுவம் தோற்றுவிக்காது என்றும் கூறினார்.

முன்னதாக இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய மேற்கு ஜேர்மனியின் முன்னாள் ஜனாதிபதி ஹெல்மட் ஷிமித் மொஸ்கோவில் கடும் போக்கு கம்யூனிஸ்டுகளால் சதி முயற்சியொன்று மேற்கொள்ளப்படும் அபாயம் இருப்பதாக எச்சரித்திருந்தார் இதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே அக்ரோமெயெவ் இதை தெரிவித்தார்.

''ஹெல்மட்ஷிமித் அவர்களே சோவியத் யூனியனில் நாங்கள் ஆறு மார்ஷல்கள் இருக்கிறோம். அவர்களில் நான் ஒருவன். நாம் எல்லோருமே பெரெஸ்ட் ரொய்க்கா (மறுசீரமைப்பு மற்றும்கிளாஸ்நோஸ்ட் (திறந்ததன்மை) சிந்தனைகளுக்கு ஆதரவாக வாக்களிக்கிறோம் என்பதை உறுதிபடக் கூறுகின்றேன். சோவியத் ராணுவத்தின் தலைமைப்பீடம் நாட்டில் இடம் பெறுகின்ற மாற்றங்களை உத்தரவாதப்படுத்தி ஆதரவளிப்பதாகவே உள்ளது' என்று அக்ரோமெயெவ் மார்ஷல் கூறினார்.

## பாலஸ்தீனியர்களுடன் ஜேம்ஸ் பேக்கர் பேச்சு

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க வெளியுறவுச்செயலர் ஜேம்ஸ் பேக்கருடன் பாலஸ்தீனயத் தலைவர் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தைகள் நட்புறவான சூழ்நிலையில் நடந்தேறியதாகவும், பாலஸ்தீனியர்கள் சென்ற தடவைகளைவிட தற்போது நம்பிக்கையுடன் இருப்பதாகவும் தெரியவருகிறது. சுமார் இரண்டரைமணிநேரம் நீடித்த பேச்சு வார்த்தைகளின் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

## பிரபலஸ்தர்களுக்குச் சோடா கலைஞர்களுக்குத் தண்ணீர்

அண்மையில் கண்டியில் நிகழ்ந்த சாகித்திய விழாவிற்குத் தமிழர் கட்சிமக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளுக்குத் தண்ணீரும் ஏனைய பிரபலஸ்தர்களுக்குக் கலர்சோடாவும் பரிமாறப்பட்டதாம்.

## பாராளுமன்ற குழுத் தோல்வி

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலீஸ் கோஷ்டிக்கும் இடையே நடந்த உதைபந்தாட்டப்போட்டியில்பாராளுமன்றக் குழு படுதோல்வி கண்டது. 5-0 என்ற கோல் கணக்கில் பொலீஸ் கோஷ்டி வெற்றிபெற்றது. 25 நிமிடம் இடம்பெற்ற இப்போட்டியில் பாராளுமன்றக் குழு பந்து காப்பாளராக மூன்று பேரை மாறி மாறி நியமித்த போதும் அவர்களால் வெற்றி வாய்ப்பை நிர்ணயிக்க முடியவில்லை.

### க. பொ. த. உயர்தரம்:

## பரீட்சை, வடக்கு கிழக்கில் 144 பரீட்சை நிலையங்கள்

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை வடக்கிலும் கிழக்கிலும் மொத்தம் 144 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. 78 பரீட்சை நிலையங்கள் யாழ். குடாநாட்டில் மாத்திரம் செயற்படும். வடக்கிலும, கிழக்கிலும் சென்ற ஆண்டு பரீட்சைக்குத் தோற்ற முடியாத 21,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள். வினாத்தாள் விநியோகம், விடைத்தாள் சேகரிப்பு போன்ற ஒழுங்குகளைக் கவனிக்க இரு மாவட்டங்களிலும் 28 பரீட்சை இணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனப் பரீட்சைப் பகுதி அறிவித்துள்ளது.

வினாத்தாள்களின் தரம் கொழும்பில் மேற்படி பரீட்சையில் வழங்கப்பட்ட வினாத்தாள்களை ஒத்ததாக அமையும் எனப் பரீட்சைப் பகுதி ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

கொழும்பு, அனுராதபுரம், புத்தளம், பொலனறுவை ஆகிய நகரங்களிலும் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், சென்ற போகத்தில் பயிர்ச்செய்கை நடைபெற்றது. கடந்த மாரியில் பாரிய வெள்ளம் போட்டுப் பயிர்கள் அழிந்தன. போதாதற்கு சிறிலங்கா இராணுவம் அறுவடை காலத்தில் மக்களைத் துன்புறுத்தியது. இதனால் மக்கள் தமது கமங்களில் அறுவடையை மேற்கொள்ள முடியவில்லை. பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். நிவாரணப் பொருள்களையும் முகாம்களில் வைத்து விநியோகிக்கிறார்கள். துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள், பணம்பறிப்பவர்கள் இங்கு தலையைக் காட்டுவதால், மக்கள் முகாம்களில் கூடி உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்குத் தயங்குகிறார்கள்.

### முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகள் கைகூடவில்லை

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், ஒலுவில், வீரமுனை ஆகிய தமிழ்க் கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவற்படை சிங்கள இராணுவத்துடன் இணைந்து அராஜகம் செய்துள்ளது. பல தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, பயப்பிராந்தியால் தமது இல்லங்களை விட்டு வெளியேறியும் உள்ளனர். பொத்துவில், பாணகம ஆகிய கிராமங்களிலிருந்து தமிழர்களை வெளியேற்றி விட்டால், அந்தக் கிராமங்கள் ஒட்டு மொத்தமாக முஸ்லிம் கிராமங்களாக அமைந்துவிடும் என்பது முஸ்லிம்கள் எதிர்பார்ப்பாகும். ஆனால் இன்று நடப்பது என்ன? பொத்துவிலுக்கு அண்மையில் இயற்கைச் சூழலில் அழகுற அமைந்த உல்லை என்ற கிராமத்தில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுகிறார்கள். பொத்துவில் கிராமத்தில் தமிழர்களின் கடைகளையும், பூட்டியிருந்த கடைகளையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். முஸ்லிம்களின் எதிர்பார்ப்புகள் வெறும் கனவாய்க் கதையாய் முடிந்துவிட்டன. முஸ்லிம்கள் வியப்படைந்துள்ளனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

போக்குவரத்துச் சீராக இல்லை. இதனால் நோயாளிகள் போதிய மருத்துவ வசதியைப் பெறாமல் மரணத்தின் விளிம்பிற்குத் தள்ளப்படுகிறார்கள். மனித நேய ஸ்தாபனமான சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவும் கூடுதலான கவனமெடுப்பதாகத் தெரியவில்லை.

போரினால் பெருந்தொகையான மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினார்கள். இந்தக் குழப்பத்தில், பிள்ளைகள் ஏழு மாதங்களாகப் பள்ளிக்கூடத்துக்குப் போக முடியாத நிலை. சிறிலங்கா அரசு க. பொ. த (உயர்தரம்) பரீட்சையை நடத்துகிறது. மாணவர்களின் பெறுபேறுகள் சரிவராது என்று தெரிந்தும், அரசு பரீட்சையை நடத்துகிறது. மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் பெருந்தொகையான மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக அமைவதற்கில்லை. மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

''மட்டக்களப்பில் இரவு நேரங்களில் புலிகளின் ஆட்சி. பகலில் படைகளின் ஆட்சி என்று பாராளுமன்றத்தில் பேசப்பட்டதே- அது எப்படி'' என்றேன்.

''மட்டக்களப்பில்சகலஇடங்களிலும் நாம் உள்ளோம். பிரதேச நிலைமைக்கேற்றவாறு எமது தந்திரோபாயங்களும் அமைந்துள்ளன. இரவிலும் பகலிலும் மிக உக்கிரமான தாக்குதல்களைமேற்கொண்டு வருகிறோம். இதுவரைகாலமும் நடந்த போரில் சுமார் 6,000 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். ஒன்றரை இலட்சம் பொதுமக்கள் வீடு வாசலை இழந்துள்ளனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன. தமிழரை அழிக்கும் நடவடிக்கைகள் தொடருகின்றன'' என்றார்.

''கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடக்கில் உள்ள மக்களும் நேசக்கரம் நீட்டியுள்ளார்கள்'' என்று கூறித் தனது செவ்வியை முடித்துக் கொண்டார்.

உள்ளூராட்சி தேர்தல் மூலம்

# பிரச்சினைக்கு தீர்வுகாண ஒப்புதலை எதிர்பார்க்கிறேன்

## பிரேமதாசா

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வொன்றைக் காண நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல் மூலம் இதற்கான ஒப்புதலை மக்களிடம் நான் எதிர்பார்க்கிறேன், ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஐக்கிய தேசியக் கட்சி நிர்வாகக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்



ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில் நாட்டின் இறைமைக்கும், ஐக்கியத்துக்கும் இடையூறு இல்லாதவகையில் வடக்குக் கிழக்குப் பிரச்சினையை எந்த வகையிலாவது ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும் இதற்கான ஆணையை மக்களிடம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

மாநாட்டில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் முக்கிய பகுதி வாசகங்கள் வருமாறு:

எமது நாட்டின் ஐக்கியம், ஆள்புல ஒருமை, இறைமை ஆகியவற்றின் கட்டுக்கோப்பிற்குள் இதுகாறும் வடக்கிலும் கிழக்கிலும் தீர்க்கப்படாதுள்ள சிக்கல்வாய்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கான வேண்டும் இந்த நோக்கில் சகல கட்சிக்குழுமங்களின் பிரதிநிதிகளுடன் கருத்து ஒருமைப்பாட்டுக்கு வர அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை ஆதரிக்கும்வகையில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின்போது எமது வேட்பாளருக்கு வெற்றிகளை ஈட்டித்தந்து அரசாங்கத்தை வலுப்படுத்துமாறு இலங்கை மக்கள் அனைவரையும் வேண்டுகிறோம்

இந்த தீர்மானத்தை கட்சியின் பொதுச்செயலாளர் சிறிசேனகுரே முன்மொழிய பொருளாளர் கே. கணேசலிங்கம் வழிமொழிந்தார்.

## காணாமல் போனவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை

(கொழும்பு)

காணாமற்போனவர்கள் தொடர்பான 1,100 ஆள் கொணர்வு விண்ணப்பங்களை இலவச சட்ட உதவிச் சங்கம் பரிசீலித்து வருவதாக அதன் பொறுப்பாளர் சட்டத்தரணி சுமணா பெனாகம தெரிவித்தார். கடந்த இரண்டரை வருட காலப் பகுதியில் காணாமற்போன 3300 பேர் தொடர்பான விண்ணப்பங்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இறுதியில் வடக்கிலும், கிழக்கிலுமிருந்து அதிகமான விண்ணப்பங்கள் வந்துள்ளன. விண்ணப்பங்களின் பரிசீலனை முடிந்ததும் மிகவிரைவில் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன. மனித உரிமை சார்பான பல சட்டத்தரணிகள் வழக்குகளுக்கு இலவசமாக ஆஜராக விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

## உதவிப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவருக்கென அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட உதவிப் பொருள்கள் இன்று திங்கட்கிழமை காலை 9 00 மணியளவில் கலைப்பீட மாணவர் பொது அறையில் வைத்து பல்கலைக்கழகமாணவர் பேரவையினரால் வழங்கப்படும்

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களுக்கிடையில் நகர்ப்புற அடிப்படை சேவைகள் நிகழ்ச்சித்திட்டம் (யூனிசெப் நிதி-1) வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு நல்லூர் பண்டார மளிகை வளவினுள் அமைந்துள்ள யாழ் மாநகரசபை அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் சகல சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (24)

**பரந்தன்**

என்றும் அதேவேளை வேறு பகுதிகளிலும் இரசாயன தொழிற்சாலைகளை நிறுவ திட்டம் தீட்டியுள்ளோம் அதனால்பரந்தன்தொழிற்சாலை மூடப்படப்போவது என்ற அர்த்தமல்ல என்றும் அவர் தெரிவித்தார்

**ஆசிரியையும்**

கொடூரமாகக் கொலைசெய்துள்ளனர்.

இராணுவத்தின் கத்தி வெட்டினால மேலும் மூன்று குழந்தைகள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

**கொழும்பில்**

திய தேர்தல் முடிந்த பின்னரே நிர்ணயிக்கப்படவுள்ளது என சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கொழும்பில் செய்தியாளரிடம் நேற்றுக் கூறியுள்ளார்.

**அதிபர்களைவிட**

1991 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டங்களில் ரூபா 2000 க்கும் குறைவான சம்பளத்தைப் பெறும் அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் அதிகரிக்கப்பட்ட பின்னா அதற்கு அதிகமாக அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியா பாதிக்கப்பட்டுள்ளனர்

கல்வித்துறை சார்ந்த ஊழியரைப் பொறுத்த வரை இந்தச் சம்பளக் கொடுப்பனவு பெரும் சிக்கலை உண்டாக்கியுள்ளது பத்து வருடகாலம் கடமையாற்றியபயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் 1ஆம், 2ஆம் 3 ஆம் தர அதிபர்கள், கல்விச் சேவை உத்தியோகஸ்தர்களைவிட அதிகமாகச்சம்பளம் பெறுகிறார்கள்.

இக்குறைபாடு அண்மையில் உயர் கல்வி அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் இது வழங்கப்படுவதால் கல்வியமைச்சு இதை நிவர்த்தி செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

**பரப்புக்கடந்தானில்**

ஐந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

அதேவேளை இராணுவத்தினர் தரித்து நின்று வெளியேறிய பகுதிகளைப் பார்வையிட்ட விடுதலைப்புலிகள் பின்வரும் பொருள்களைக் கண்டெடுத்தனர்

ஜி. பி. எம். ஜி பெரல் - 1
ஜே. ஆர் கைக்குண்டுகள் - 6
றிமோட் கிரனைட் - 1
ரி. என். ரி. கைக்குண்டு - 1
எப். என். சி மகசீன் - 4
5.56 ரவை - 820
மினிமி லிங் - 2757
50 கலிபர் லிங் - 1076
5.56 ரவை லிங்குடன் - 67
ஜி. பி. எம் ஜி லிங் - 220
ஜி.பி எம். ஜி ரவை லிங்குடன் - 500
வயர் றோல் - 3
எல 3 லிங் - 20
செயின் பெட்டி - 10
தொலைநோக்கி - 1

## மரண அறிவித்தல்

### நடராசா மதீதரன் B.Sc. (Hons)

(Demonstrator, திறந்த பல்கலைக்கழகம் நாவல, நுகேகொடை)

நடராசா மதீதரன் B.Sc. (Hons) அவர்கள் 20-04-91 சனிக்கிழமை வவுனியாவில் அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற நடராஜா, திருமதி சு. நடராஜா ஆகியோரின் அன்பு மகனும், முரளிதரன் ரதிதரன் (ஆசிரியர்), சிறிதரன் ஆகியோரின் சகோதருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (22 - 04 - 91) இன்று மாலை 3 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில்,
கொக்குவில் கிழக்கு.
(R/1342)

தகவல்:
ந. முரளிதரன்
(சகோதரர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பொலிஸாரின் துப்பாக்கியை பறித்துச் சென்றார்

(காலி)

மாத்தறையில் பெலியத்தைப் பொலிஸார் ஜே. வி. பியினரைக் கைதுசெய்யச் சென்ற போது பொலிஸார் ஒருவரின் கையில் இருந்த துப்பாக்கி ஜே.வி பியைச் சேர்ந்த ஒருவரால் பறித்துச் செல்லப்பட்டது இச்சம்பவத்தைத் தொடர்ந்து பத்துப் பேரைப் பெலியத்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## போரின் பின்பும் கணிசமான இரசாயன ஆயுதங்கள் ஈராக்கிடம் உள்ளதாம்

(பாக்தாத்)

வளைகுடாப் போருக்குப் பின்னரும் பெரும்பாலான இரசாயன ஆயுதங்கள் கணிசமாக மிஞ்சிப் போயுள்ளன என்றும் ஆனால் கிருமிகளைப் பரப்பும் ஆயுதங்கள் இல்லை என்றும் ஈராக் ஐ. நா சபையிடம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஐ. நா; சபையிடம் சமர்ப்பித்த அறிக்கையொன்றில் ஈராக் தன்னிடம் 10,000 நரம்பியல் பாதிப்புவாயுக் குண்டுகளும் 1000 தொன் நரம்புபாதிப்பு மற்றும் கடுத வாயுவும், 1500 இரசாயன குண்டுகளும் 23 வெ குண்டுகளும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது

மூன்றிலொரு நரம்பியல் வாயுக்கள் வளைகுடாப் போரின்போது இடிபாடுகளுக்கிடையில் புதையுண்டதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனதா தளத்திலிருந்து ஜன்மோர்ச்சா விலகியது

(புதுடில்லி)

ஜனதாக் கட்சியின் ஒரு அங்கமாக இருந்த ஜன்மோர்ச்சா கட்சி நேற்று முதல் ஜனதாக் கட்சியுடனான சகல தொடர்புகளையும துண்டித்துக் கொண்டுவிட்டது. ஜன்மோர்ச்சா கட்சியின் சார்பில் திரு. ஆரிப் முகமது கான் மத்திய பிரதேசத்திலுள்ள பராஜ் தொகுதியிலிருந்து மக்களவைக்கு போட்டியிடுகிறார்.

## புதிய உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்படும் புதிய அங்கத்தவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும் எனப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபை அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் மாநகரமுதல்வர், பிரதி மாநகர முதல்வர், தலைவர், பிரதித்தலைவர் ஆகியோருக்கு இப்பயிற்சிநெறிகள் வழங்கப்படுமென்றும், இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

**மாவிலங்கேணி**

தல் மேற்கொண்டதில் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில்போராளியொருவர் வீரமரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மூன்றுமணியளவில் மாவிலங்கேணியில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் செம்மண் தீவை நோக்கி முன்னேற முயன்றபோது மாவிலங்கேணியில் இருந்து 500 யார் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. இந்தத் தாக்குதலால் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன இராணுவத்தினர் வெளிவந்தபோது அவர்களுக்கு உதவியாக விமானத் தாக்குதல்கள் நடந்தவண்ணம் இருந்தன.

**பயணிகள்**

(வயது 40 சாந்தசோலை வவுனியா) ஆகிய பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நாகமணிகன்னிகா (வயது33 புதிய சின்னக்குளம் ஓமந்தை), கணபதிப்பிள்ளை கௌரி (வயது 10 உதயநகர் கிளிநொச்சி) தங்கவேல் பூமலர் (வயது 37 நுணாவில் மேற்கு சாவகச்சேரி) நாகலிங்கம் ஜெயமலர் (வயது 14 மடுக்கே வில், மன்னார்), வைரவன் சின்னையா வயது 70 மாறம்பைக்குளம் வவுனியா) யோகேஸ்வரன் இராணி வயது 30 கக்கையன் குளம் வவுனியா), சுந்தரலிங்கம் நாகராசா (கோதண்டர் நொச்சிக்குளம்) ஆகியோருட்பட பதினொருபேர் படுகாயமடைந்துள்ளனர். (தி)

### குர்திஷ் சுயாட்சி ?

(பாக்தாத்)

ஈராக்கிய அரசு புதிய சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் குர்திஷ் இன மக்களுக்கு கூடுதல் சுயாட்சி அளிக்க முன்வந்துள்ளது. பக்தாத்தில் ஜனநாயக அரசு அமைப்பவும் இந்த அரசியலமைப்பு வகை செய்கிறது. நேற்று பாக்தாத்தில் குர்திஷ்தான் தேசியமுன்னணி தூதுக்குழுவும், ஈராக்கிய அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இணக்கம் எதுவும் இறுதியாக்கப்படுவதற்கு முன்பு சகல குர்திஷ் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமென குர்திஷ் தலைவர்கள் வற்புறுத்தினர்.

**இந்தியத்**

வெள்ளியன்று மாலை வீதியில் வைத்து காவலரால் கைது செய்யப்பட்டார். அவர் தான் தூதரக ஊழியர் எனத் தெரிவித்ததையும் அவரது அடையாளஅட்டையையும் பொருட்படுத்தாமல் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இதேபோல முன்னர் இந்தியப் பத்திரிகை ஊழியர் ஒருவரும், இந்திய வானொலி ஊழியர்ஒருவரும்கடுமையான மனவதைக்குள்ளாக்கப் பட்டிருந்தனர். அவர்களைக்கொல்லப்போவதாக மிரட்டலும் விடுக்கப்பட்டிருந்தது. இவை பற்றி இந்தியதூதரகம் இலங்கையிடம் சுட்டிக்காட்டிய போது இது போன்று மீளவும் நடைபெறாதென உறுதியளிக்கப் பட்டிருந்தது. ஆனால் இப்போது மூன்றாவது தடவையாகவும் நடந்திருப்பதாக சுட்டிக்காட்டும் தூதரக வட்டாரங்கள் இலங்கை அரசிடம் கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளது. மேலும் எழுத்து மூலமாக ஆட்சேபனை ஒன்றை தூதரகம் இன்று வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சுகளிடம் கையளிக்கும் எனவும் தெரியவருகிறது.